සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| තෙවන වාර පරීක්ෂණය 2020 | 11 ශ්‍රේණිය |
| மூன்றாம் தவணைப் பரீட்சை 2020 | தரம் 11 |
| **Third Term Test 2020** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය II | | පැය දෙකයි |
| **வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II** | | **இரண்டு மணித்தியாலம்** |
| **Business & Accounting Studies II** | | ***Two hours*** |

**கவனிக்குக**

**முதலாம் வினா உட்பட பகுதி I இல் 2 வினாக்களையும் பகுதி II இல் 2 வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) சமன் ரத்நாயக என்பவர் முகாமைத்துவ கற்கைநெறியினை பூர்த்தி செய்து தொலைபேசி விற்பனை செய்தல் மற்றும் திருத்துதல் தொடர்பான வணிகத்தை ஆரம்பித்து நடாத்தி செல்ல எண்ணியுள்ளார். இதற்காக தனது தந்தையிடமிருந்து ரூபா 200,000 இனை பெற்று தமது வியாபாரத்தை ஆரம்பித்தார். இதற்கு மேலதிகமாக ரூபா 100000 இனை வணிக வங்கியொன்றில் கடனாக பெற்றுக்கொண்டுள்ளார். அதேவேளை தொலைபேசி திருத்த சேவை தொடர்பாக நிபுணத்துவம் வாய்ந்த ஊழியர் ஒருவரையும் சேர்த்துக்கொண்டார்.

(அ) வணிகம் என்பதால் கருதப்படுவது யாது?

(ஆ) மேலே குறிப்பிட்ட வணிக வகை எது என குறிப்பிடுக?

(இ) நீர் குறிப்பிட்ட வணிக வகையின் நன்மைகள் 2 இனையும் தீமைகள் 2 இனையும் குறிப்பிடுக?

(ஈ) மேலே குறிப்பிட்ட வணிகத்தின் பலங்கள் 2 இனை குறிப்பிடுக?

(உ) சமன் தனது வியாபாரத்திற்கு சட்ட ரீதியான அந்தஸ்தினை பெற்றுக்கொள்ள பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?

(ஊ) சமனின் வணிகம் சட்ட ரீதியான அந்தஸ்தினை பெற்று கொள்வதால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக?

(எ) சமன் ரத்நாயக வணிகத்தில் இடம்பெற்ற முதலாவது கொடுக்கல் வாங்களை வணிகத்தின் அடிப்படை கணக்கீட்டு சமன்பாட்டில் பதிந்து காட்டுக?

(ஏ) முறையான கணக்கு வைப்பினால் சமன் வணிகம் பெற்று கொள்ளும் அனுகூலங்கள் எவை?

(ஐ) சமன் வணிகத்திற்கு 50,000 ரூபா பெறுமதியான தொலைபேசிகள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இக் கொடுக்கல் வாங்களை பதிவு செய்ய பயன்படுத்தப்படும் மூல ஏடு எது?

(ஒ) இக் கொடுக்கல் வாங்கலுக்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணம் எது?

(2 x 10 = 20 புள்ளிகள் )

## பகுதி I

02)

(1) சில்லறை வியாபாரத்தின் பண்புகள் 2 இனை குறிப்பிடுக.

(2) சில்லறை வியாபாரத்தின் மூலம் நுகர்வோருக்கு கிடைக்கப் பெறும் சேவைகள் 2 இனை குறிப்பிடுக.

(3) துணைச்சேவைகள் வியாபாரங்களின் வெற்றிக்கு உதவி செய்கின்றன. அத்தகைய துணைச்சேவைகள் 2 இனை குறிப்பிடுக.

(4) காசோலையுடனான கொடுக்கல் வாங்களோடு தொடர்புடைய தரப்பினர்களை பெயரிடுக.

( 2 x 4 = 08 புள்ளிகள் )

03)

(1) ஆயுற் காப்புறுதி மற்றும் ஆதன காப்புறுதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு 2 இனை குறிப்பிடுக.

(2) கீழே குறிப்பிடப்படும் கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( x ) எனவும் குறிப்பிடுக.

1. தனிநபர் ஒருவரின் ஆயுள் மற்றும் அதனோடு தொடர்புடைய இழப்பீடுகளுக்கு பாதுகாப்பினை வழங்குவது ஆயுளுறுதியாகும். (….......)
2. ஆதன மற்றும் ஆயுளை காப்புறுதி செய்யும் போது அவற்றின் ஆபத்து இல்லாமல் போகும் (….......)
3. ஆதன காப்புறுதியில் ஒப்பந்தத்தின் பெறுமதியை காப்புறுதி செய்யும் நபரின் விருப்பம் மற்றும் கட்டணங்களை செலுத்தகூடிய ஆற்றல் என்பவற்றிற்கேற்ப தீர்மானித்து கொள்ள முடியும். (..........)
4. இழப்பீட்டு தத்துவம் ஆயுள் காப்புறுதிக்கு பொருத்தமாகாது. (……….)

(3) உங்களது பாடசாலையின் அதிபரால் கீழே குறிப்பிடப்படும் தரப்பினர்களுடன் தொடர்பாடுவதற்கு பொருத்தமான தொடர்பாடல் ஊடகம் எது என குறிப்பிடுக.

1. பெற்றோர்கள்
2. கல்வி திணைக்கள அதிகாரிகள்

(4) வியாபாரி ஒருவர் தமது பொருட்களை போக்குவரத்து செய்யும் போது பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் 2 இனை குறிப்பிடுக. ( 2 x 4 = 08 புள்ளிகள் )

04)

(1) முகாமைத்துவத்தின் பிரதான பணிகளை குறிப்பிடுக.

(2) கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் எந்த முகாமைத்துவ கருமத்திற்குரியதென குறிப்பிடுக.

1. சுற்றாடல் தினத்திற்காக செய்ய வேண்டிய செயற்பாடுகளை தீர்மானித்தல்.
2. சுற்றாடல் தினத்திற்காக செயற்குழுவின் தலைவர் ஒருவரை தீர்மானித்தல்.

(3) சந்தைப்படுத்தல் கலவையை குறிப்பிடுக.

(4) உற்பத்திக்கு விலையிடும் போது கவனத்தில்கொள்ளப்படும் 2 விடயங்களை தருக

( 2 x 4 = 08 புள்ளிகள் )

## பகுதி II

05)

(1) சில்லறை காசு கட்டுநிதி என்பதால் கருதப்படுவது யாது? (2 புள்ளிகள்)

(2) கீழே குறிப்பிடப்படும் கொடுக்கல் வாங்கல் சிவா வியாபாரத்தின் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட சில்லறை காசு கொடுக்கல் வாங்கல்களாகும். அவற்றை சில்லறை காசேட்டில் பதிந்து பேரேட்டு கணக்குகளுக்கு மாற்றுக.

| | | | |
|---|---|---|---|
| 2020.02.01 | பிரதான காசாளரிடமிருந்து பெற்றது | ரூபா | 1000 |
| 2020.02.02 | உபசரிப்பு செலவுகள் | ரூபா | 50 |
| 2020.02.05 | பேனை கொள்வனவு | ரூபா | 60 |
| 2020.02.08 | சீனி, தேயிலை கொள்வனவு | ரூபா | 120 |
| 2020.02.10 | வாடகை வாகனம் செலவு | ரூபா | 150 |
| 2020.02.12 | சுத்தம் செய்தல் | ரூபா | 50 |
| 2020.02.13 | அனுரவுக்கு செலுத்தியது | ரூபா | 300 |
| 2020.02.15 | கட்டுநிதி மீள்நிரப்பப்பட்டது | | |

(10 புள்ளிகள்)

06)

(அ) வியாபார நிறுவனமொன்றின் குறித்த நிதியாண்டினுள் இடம்பெற்ற வருமானம் மற்றும் விற்பனை கிரயம் வருமாறு

| | |
|---|---|
| காசு விற்பனை | 75000 |
| கடன் விற்பனை | 40000 |
| விற்ற சரக்கின் கிரயம் | 51000 |
| முதலீட்டு வருமானம் | 5000 |
| வாடகை வருமானம் | 25000 |
| பெற்ற கழிவு | 6000 |
| பெற்ற வட்டி | 5000 |

(1) நிறுவனத்தின் மொத்த இலாபம் அல்லது நட்டத்தை கணிப்பிடுக. (5 புள்ளிகள்)

(2) நிறுவனத்தின் ஏனைய வருமானங்களின் கூட்டுத்தொகையை காண்க. (2 புள்ளிகள்)

(ஆ) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தாக்கங்களுக்கு பொருத்தமான கொடுக்கல் வாங்கல்களை பெறுமதியுடன் குறிப்பிடுக.

1. சொத்து அதிகரித்தல், சொத்து குறைதல்
2. சொத்து குறைதல், உரிமை குறைதல்
3. சொத்து அதிகரித்தல், பொறுப்பு அதிகரித்தல்
4. சொத்து அதிகரித்தல், உரிமை அதிகரித்தல்
5. பொறுப்பு குறைதல், சொத்து குறைதல் (5 புள்ளிகள்)

07) மாரி வியாபாரத்தின் 2019.12.31 திகதி வங்கி மீதி ரூபா 11500 ஆகும். அன்றைய தினத்தில் வங்கியின் வங்கி கூற்று வேறொரு மீதியினை காட்டியது. இவ் வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு.

(1) டிசம்பர் மாதத்தில் வைப்பு செய்த ஆனால் இன்னும் அம் மாதம் வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 10000

(2) டிசம்பர் மாதத்தில் வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்பிக்கப்படாத காசோலை ரூபா 6500

(3) வங்கியிலிருந்து அறவிடப்பட்ட வங்கி கட்டணம் 600 ரூபா செலுத்திய வட்டி 1000 ரூபா இன்னும் காசு புத்தகத்தில் பதியப்படவில்லை.

(4) வங்கிக்கு வாடிக்கையாளர் ஒருவரால் நேரடியாக வைப்பிலிட்ட ரூபா 3000 காசு புத்தகத்தில் பதியப்படவில்லை.

வேண்டப்படுவது

1. 2019.12.31 காசு புத்தகத்தில் தேவையான சீராக்கங்கள்.
2. 2019.12.31 வங்கி கணக்கிணக்க கூற்று

( 12 புள்ளிகள் )